# பிதாவாகிய ஆபிரகாம்

## பாடம் ஒன்று

## ஆபிரகாமின் வாழ்க்கை: அமைப்பும் உள்ளடக்கமும்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய  எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட  நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு  மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை  பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு   பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு  வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல்  பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

இலக்கிய வடிவமைப்பு ........ 2

**ஆதியாகமம்** ........ 3

**ஆபிரகாம்** ........ 4

அடிப்படை அலகுகள் ........ 5

ஒழுங்கமைப்பு ........ 7

முக்கிய கருப்பொருள்கள் ........ 9

**முக்கிய வேத பகுதி** ........ 10

முன்னுரை ........ 11

பகுதி ஒன்று ........ 12

பகுதி இரண்டு ........ 12

**திறப்பு** ........ 14

தெய்வீக கிருபை ........ 14

ஆபிரகாமுடைய தேவப்பற்று ........ 16

ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் ........ 18

ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதங்கள் ........ 19

முடிவுரை ........ 21





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

பூமியிலுள்ள தேசங்களிடையே பல வேறுபாடுகள் இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். வித்தியாசமான புவியியல், மாறுப்பட்ட மக்கள் இனக்குழுக்கள் மற்றும் தனித்துவம் வாய்ந்த பண்பாடுகள் அவைகளில் உள்ளன. ஆனால், நம்முடைய தேசங்கள் எவ்வாறு உருவாகின என்பதற்கான கதைகள் எல்லா தேசங்களிலும் உள்ள ஒரு பொதுவான காரியமாகும். நம் தேசத்தை உருவாக்கியவர்களின் தியாகங்களையும், சாதனைகளையும் குறித்த கதைகளைக் கேட்க நம்மில் அநேகருக்கு ஆசையுண்டு. அவர்களின் வீரதீர செயல்களைப் புகழ்ந்து பாடுகின்றோம்.

தேசங்கள் உருவாக்கப்பட்ட கதைகளை நாம் ஏன் மனதில் வைத்து சிந்திக்கிறோம் மற்றும் பிறரிடம் பகிர்ந்து கொள்கிறோம்? இது ஒவ்வொரு மனித கலாச்சாரத்திற்கும் ஏன் முக்கியமான பங்காக இருக்கிறது எனத் தெரியுமா?

நல்லது, குறைந்தப்பட்சம் இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒருபுறம், கடந்த கால நினைவுகளை பிறரிடம் பகிர்ந்து கொள்ள நமது தேசங்களின் தோற்றம் பற்றி பேசுகிறோம். நாம் நம்முடைய பிள்ளைகள் எங்கிருந்து வந்தார்கள் என்பதையும், அவர்களின் மூலத்தையும் அவர்கள் நினைவிற்கொள்ள விரும்புகின்றோம். ஆனால் மறுபுறம், எதிர்காலத்தில் எந்த திசையில் செல்ல வேண்டும் என்பதை அறிந்துகொள்ள கடந்த காலங்களில் நம் தேசங்களுக்கு வழிகாட்டிய இலட்சியங்களை நினைவில் வைத்துக் கொள்ள விரும்புகிறோம்.

பழைய ஏற்பாட்டில் இருந்த தேவனுடைய ஜனங்களுக்கும் இந்த உண்மை பொருந்தும். பண்டைய இஸ்ரவேலர்கள் தங்கள் தொடக்கங்களைப் பற்றிய கதைகளை மிகவும் நேசித்தார்கள், நாம் பார்த்த அதே இரண்டு காரணங்களுக்காக அவற்றை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குப் பகிர்ந்தனர். கடந்த காலத்தின் பெரிய சாதனைகள் மறக்கப்படக்கூடாது என்பதற்காக நீண்ட காலத்திற்கு முன்பே நிகழ்வுகளை நினைவில் வைத்துக் கொள்ள தங்கள் முன்னோர்களின் நாட்களைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். எதிர் காலத்தில் அவர்கள் செல்ல வேண்டிய சரியான திசையை நினைவுபடுத்த தலைமுறை தலைமுறையாக இந்தக் வரலாற்றைச் சொன்னார்கள்.

*பிதாவாகிய ஆபிரகாம்* என்ற தலைப்பில் நம் தொடரின் முதல் பாடம் இதுவாகும். இந்தத் தொடரில் பண்டைய இஸ்ரவேலர்கள் தங்கள் பெரிய முற்பிதாவான ஆபிரகாமைப் பற்றி சொன்ன கதைகளை ஆராய்ந்து பார்ப்போம். மோசே இந்தக் கதைகளை ஆதியாகமம் புத்தகத்தில் எழுதியிருப்பதைக் காண்போம், இதனால் இஸ்ரவேலர்கள் அவருடைய

நாளில் கடந்த காலத்தைப் பற்றி நினைவில் கொள்ள முடிந்தது, மேலும் தேவன் அவர்களுக்காக ஆயத்தம் செய்து வைத்திருக்கும் எதிர்காலத்தையும் அவர்கள் தெளிவாக புரிந்துகொள்ள முடிந்தது.

இந்தத் தொடரில் உள்ள மூன்று பாடங்களில் இதுவே முதன்மையானது, அதற்கு நாம் வைத்துள்ள தலைப்பு "ஆபிரகாமின் வாழ்க்கை: அமைப்பும் உள்ளடக்கமும்." இந்தப் பாடத்தில், ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றிய மேலோட்டத்தை ஆதியாகமத்தில் உள்ள அதிகாரங்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் அவரைப் பற்றி பேசுவோம். ஆபிரகாமின் வாழ்க்கை வரலாற்றை மோசே எவ்வாறாக அமைத்திருக்கின்றார்? இந்த அதிகாரங்களின் முக்கிய நோக்கங்கள் என்ன?

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் அமைப்பையும் உள்ளடக்கத்தையும் நாம் இரண்டுப் பிரிவுகளாக ஆய்வு செய்யலாம்: முதலில், இதன் இலக்கிய வடிவமைப்பைப் பார்ப்போம். இரண்டாவதாக, இந்த அதிகாரத்தில் காணப்படும் முக்கிய கருப்பொருட்களை ஆராயலாம். ஆபிரகாமுடைய வாழ்க்கையின் இலக்கிய வடிவமைப்பை முதலாவதாக நாம் கவனிக்கலாம்.

# இலக்கிய வடிவமைப்பு

முதன்மையாக கதைச் சுருக்கங்கள் அல்லது கதைகளைக் கொண்ட ஆபிரகாமின் வாழ்க்கை போன்ற வேதத்தின் பகுதிகளை நாம் அணுகும்போதெல்லாம், வேதாகம எழுத்தாளர்கள் வெகு காலத்திற்கு முன்பு நடந்ததைப் பற்றிய உண்மையை வெறுமனே சொல்வதை விட அதிகமாக செய்தார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவர் வேதத்தை எழுதியவர்களுக்கு அவர்கள் எழுத வேண்டியதை அருளியதால், அவர்கள் எழுதிய வரலாறு முற்றிலும் உண்மையாகும். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் எழுதிய மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் எழுதுவதற்கு அவர்களை வழிநடத்தியதால் வேதாகம எழுத்தாளர்கள் வரலாற்றைப் பற்றி எழுதும்போது தங்கள் வாசகர்களை மனதில் கொண்டு எழுதினர். இந்த கதைகள் அவைகளை வாசிக்கிற மக்களின் வாழ்க்கைக்கு பொருத்தமானதாக இருக்கும் என்பதை மனதில் கொண்டு அதற்கேற்றவாறு தங்கள் கதைகளை வடிவமைத்தனர்.

ஆதியாகமத்தில் ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றிய காரியங்களை வாசிக்கும்போது, இந்த கதைகள் ஆபிரகாமின் வாழ்க்கையில் உண்மையில் என்ன நடந்தது என்பதை தவறாக சித்தரிக்கவில்லை என்று நாம் நம்ப முடியும். ஆனால் இந்த கதைகள் மோசேயின் முதல் வாசகர்களின் வாழ்க்கையில் எவ்வாறு பொருந்தின என்பதைப் புரிந்து கொள்ள, ஆதியாகமம் ஆபிரகாமின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாழ்க்கையை *எவ்வாறு* சித்தரிக்கிறது என்பதையும் நாம் அறிந்திருப்பது அவசியம். ஆபிரகாமின் வாழ்க்கையை ஆதியாகமத்தில் இலக்கிய வடிவமைப்பின்படி ஆய்வு செய்வதே ஆபிரகாம் எவ்வாறாக சித்தரிக்கப்பட்டிருக்கிறார் என்பதை புரிந்து கொள்வதற்கான முதன்மையான வழியாகும்.

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் இலக்கிய வடிவமைப்பை இரண்டு படிகளில் நாம் ஆராய்ந்து பார்ப்போம். முதல் கட்டமாக, ஆதியாகமம் முழு புத்தகத்தையும் மேலோட்டமாக பார்க்கலாம், அதன் பின்னர் ஆதியாகமத்தின் பெரிய சித்திரத்தில் ஆபிரகாமின் வாழ்க்கை எவ்வாறு பொருந்துகின்றது என்று பார்ப்போம். இரண்டாவது கட்டமாக, ஆபிரகாமின் வாழ்க்கையை மையப்படுத்தி கட்டமைக்கப்பட்டுள்ள கதைகளைப் பார்ப்போம். ஆதியாகம புத்தகம் முழுவதையும் மேலோட்டமாகப் பார்க்கத் துவங்கலாம்.

## ஆதியாகமம்

நூற்றாண்டுகளாக, ஆதியாகமத்தின் கட்டமைப்பு அதிகமாக மாறுபட்ட முறைகளில் பல்வேறு உரைப்பெயர்ப்பாளர்களால் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஆதியாகமம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற மற்றும் திரும்பத் திரும்ப வருகின்ற “வம்ச வரலாறு“ அல்லது *“டோலேடோத்”* என்கிற பதங்களின் அடிப்படையில் வேதப் பகுதிகளை பத்து பிரிவுகளாக பிரித்து பார்ப்பது ஒரு அணுகுமுறையாகும். இந்த பெரிய அளவிலான பார்வையில் சில மதிப்புமிக்க விஷயங்கள் இருப்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் மற்ற தொடர்களில் ஆதியாகமத்தை, ஆதியாகமம் 1:1–11:9 இல் ஆரம்பகால வரலாறு; 11:10–37:1 இல் ஆரம்பகால முற்பிதாக்களின் வரலாறு; 37:2–50:26 இல் பிற்கால முற்பிதாக்களின் வரலாறு என்று மூன்று பெரிய பிரிவுகளில் சிந்திப்பது மிகவும் உதவியாக இருக்கும் என்று நாங்கள் பரிந்துரைத்துள்ளோம்.

ஆதியாகமம் 1:1–11:9 இல் உள்ள ஆரம்பகால வரலாறு உலகின் தோற்றம் பற்றிய தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட உண்மையை அளிக்கிறது. இது சிருஷ்டிப்பைப் பற்றியும், சிருஷ்டிப்பு சீர்கெட்டுப் போனதைப் பற்றியும் மற்றும் உலகளாவிய ஜலப்பிரளயத்தின் மூலம் சிருஷ்டிப்பு மறுவடிவமைக்கப்பட்டது பற்றியும் பேசுகிறது. பண்டைய கிழக்கத்திய நாடுகளில் உள்ள ஆரம்பகால வரலாறுகளுக்கு ஒத்த வழிகளில் இது ஒரே இலக்கிய அலகாக உள்ளது.

37:2–50:26 இல் உள்ள முற்பிதாக்களின் வரலாறு யோசேப்பின் கதையைச் சொல்கிறது. இந்த வரலாறு யோசேப்புக்கும் அவன் சகோதரர்களுக்கும் இடையே நிகழ்ந்த மோதலோடு தொடங்கி, யோசேப்பு எகிப்திலே அதிகாரத்திற்கு உயர்ந்து, பின் தன் சகோதரர்களுடன் ஒப்புரவு அடைவதில் முடிகிறது. இந்த நீண்ட ஒருங்கிணைந்த கதைக்களம் யோசேப்பைப் பற்றிய *குறுங்கதை* என பல உரைப்பெயர்ப்பாளர்கள் விளக்குகின்றனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முதல் பகுதிக்கும் கடைசி பகுதிக்கும் இடையே அமைந்துள்ளது ஆதியாகமம் 11:10–37:1 ஆகும். இந்த அதிகாரங்களில் ஆரம்பகால முற்பிதாக்களின் வரலாறு, இஸ்ரவேல் தேசத்தின் முதல் பிதாக்கள் பற்றிய கதைகளின் தொகுப்புகள் உள்ளன. இந்தத் தொடரில், ஆதியாகமத்தின் இந்த மையப் பிரிவின் ஒரு பகுதியில் நாம் கவனம் செலுத்துகிறோம்.

பொதுவாக, ஆரம்பகால முற்பிதாக்களின் வரலாறு, 11:10–25:18 இல் ஆபிரகாமின் வாழ்க்கை மற்றும் 25:19–37:1 இல் யாக்கோபின் வாழ்க்கை என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது.இப்பொழுது இந்த இருமடங்கு பிரிவு முதலில் ஆச்சரியத்தைத் தரலாம் ஏனென்றால் வேதாகமத்தில்மூன்று முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபைப் பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். எனவே, இந்த அதிகாரங்களின் இலக்கிய அமைப்பு முதலில் ஆபிரகாமைப் பற்றியும், பின்னர் ஈசாக்கைப் பற்றியும், பின்னர் யாக்கோபைப் பற்றியும் சொல்லும் மூன்று மடங்காக இருக்கும் என்று நாம் நியாயமான முறையில் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் உண்மையில், ஆரம்பகால முற்பிதாக்களுடைய வரலாற்றின் எந்த பகுதியும் ஈசாக்கை முக்கிய நபராக கருதவில்லை. மாறாக இவர் ஒரு இடை நிலை நபராய் காட்டப்பட்டுள்ளார். இவரது வாழ்வு முதலில் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும் பின்னர் யாக்கோபுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும் கூறப்பட்டுள்ளது . இதன் காரணமாக, உண்மையில் ஆரம்ப முற்பிதாக்களின் வரலாறானது, ஆபிரகாமின் வாழ்க்கை மற்றும் யாக்கோபின் வாழ்க்கை என்று இரண்டு முக்கிய பகுதிகளாக மட்டுமே பிரிக்கப்படுகிறது. இந்தத் தொடரில் முற்பிதாக்களின் காலத்தின் முதல் பாதியில், பிதாவான ஆபிரகாமைப் பற்றிய மோசேயின் பதிவில் நம் கவனத்தை செலுத்துவோம். ஆதியாகமம் 11:10–25:18 இல் உள்ளபடி நாம் ஆபிரகாமின் வாழ்க்கைக் கட்டமைப்பை கூர்ந்து கவனிப்போமாக.

## ஆபிரகாம்

ஆதியாகமத்தின் கட்டமைப்பில் ஆபிரகாமுடைய வாழ்க்கை கச்சிதமாக பொருந்தினதைப் பார்த்தோம், நம்முடைய அடுத்த காரியமான ஆதியாகமம் 11:10–25:18 இல் உள்ள ஆபிரகாமுடைய வாழ்க்கையின் அமைப்புக்கு நேராக நாம் திரும்ப வேண்டும். ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கட்டமைப்பை ஆராய, இந்த அதிகாரங்களை இரண்டு நிலைகளில் பார்ப்போம்: ஒருபுறம், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் *அடிப்படை அலகுகள்* அல்லது அத்தியாயங்களை வெறுமனே அடையாளம் காண்போம், மறுபுறம், இந்த பல்வேறு அத்தியாயங்கள் ஆதியாகமத்தில் நம்மிடம் இருக்கும் ஆபிரகாமின் சித்திரப் பிரதிமையில் எவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்பதை ஆராய்வோம். முதலாவதாக நாம் ஆபிரகாமின் வாழ்க்கையின் அடிப்படை அலகு அல்லது அத்தியாயங்களை அடையாளப்படுத்துவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## அடிப்படை அலகுகள்

ஆபிரகாமின் வாழ்க்கையை மோசே பதினேழு அடிப்படை பிரிவுகள் அல்லது அலகுகளாக எழுதினார்:

1. முதலாவதாக, ஆபிரகாமின் வம்சவரலாறு (11:10-26 இல்), குடும்ப பாரம்பரியத்தை விவரிக்கும் ஒரு தலைமுறை.
2. ஆபிரகாமின் தோல்வியுற்ற தந்தையைப் பற்றிய காரியத்தைத் தொடர்ந்து இந்த வேத பகுதி வருகிறது (11:27-32 இல்), இது ஆபிரகாம் தனது தந்தை தேராகுவுடன் பயணித்ததை விவரிக்கும் இரண்டாவது வம்ச வரலாறாகும்.
3. ஆபிரகாம் கானானுக்கு புலம்பெயர்தல் (12:1-9 இல்), ஆபிரகாமின் ஆரம்ப அழைப்பும் வாக்குத்தத்த தேசத்திற்கான பயணமும்.
4. ஆபிரகாம் எகிப்திலிருந்து விடுவிக்கப்படுதல் (12:10-20 இல்), ஆபிரகாம் எகிப்தில் தங்கியிருந்த போது தேவன் அவரை விடுவித்த காலம்.
5. லோத்துடன் ஆபிரகாமுக்கு பிணக்கம் ஏற்படுதல் (13:1-18 இல்), ஆபிரகாமின் வேலைக்காரர்களுக்கும் லோத்தின் வேலைக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தின் கதை.
6. ஆபிரகாம் லோத்தை காப்பாற்றுதல் (14:1-24 இல்), லோத்தை சிறைப்பிடித்த அரசர்களிடமிருந்து அவனை காப்பாற்ற ஆபிரகாம் போருக்குப் போன காலம்.
7. ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள் (15:1-21 இல்), ஆபிரகாமுக்கு பல சந்ததியினரும் ஒரு நிரந்தரமான சொந்த தேசமும் இருக்கும் என்ற தேவனுடைய உடன்படிக்கைக் கணக்கின் உறுதிப்பாடாகும்.
8. ஆகாருடன் ஆபிரகாமின் தோல்வி (16:1-16 இல்), சாராளின் அடிமைப்பெண்ணாகிய ஆகாருக்கு ஆபிரகாம் ஒரு பிள்ளையைப் பெற்ற காலம்.
9. ஆபிரகாமுடைய உடன்படிக்கையின் தேவைகள் (17:1-27 இல்), தேவனுடைய கட்டளைகளுக்கு விசுவாசமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை ஆபிரகாமுக்கு நினைவூட்டிய தேவனுடைய உடன்படிக்கையின் கணக்கு.
10. சோதோம் கோமோரா (18:1– 19:38 இல்), சோதோம் கோமோராவின் அழிவும் அழிவினின்று லோத்து காப்பாற்றப்பட்ட கதையும்.
11. அபிமெலேக்குக்காக ஆபிரகாம் பரிந்துரை விண்ணப்பம் (20:1-18 இல்), பெலிஸ்தியனாகிய அபிமெலேக்கிற்காக ஆபிரகாம் விண்ணப்பம் செய்த காலம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

12. ஆபிரகாமின் குமாரர்கள் ஈசாக்கு மற்றும் இஸ்மவேல் (21:1-21 இல்), ஈசாக்கின் பிறப்பைப் பற்றியும் இஸ்மவேலை ஆபிரகாமின் குடும்பத்திலிருந்து துரத்தி விடுதலைப் பற்றியதுமான கதை.
13. ஆபிரகாம் அபிமெலேக்குடன் ஒப்பந்தம் செய்தல் (21:22-34 இல்), ஆபிரகாம் அபிமெலேக்குடன் தண்ணீர் மற்றும் இடம் சார்ந்து உரிமை கோரும் ஒப்பந்தம் செய்த காலம்.
14. ஆபிரகாம் சோதிக்கப்படுதல் (22:1-24 இல்), தேவன் தனது மகன் ஈசாக்கை பலியிட ஆபிரகாமை அழைத்த காரியங்கள் அடங்கியுள்ள நமக்கு நன்கு அறியப்பட்ட அத்தியாயம்.
15. ஆபிரகாமின் கல்லறை பூமி (23:1-20 இல்), சாராளின் மரணமும் கல்லறை பூமி வாங்கினதும் அடங்கிய கதை.
16. ஈசாக்குக்கு மனைவியை கண்டுபிடித்தல் (24:1-67 இல்), ரெபெக்காள் ஈசாக்கின் மனைவியான காலம்.
17. இறுதியாக, ஆபிரகாமின் மரணமும் அவனுடைய வாரிசும் (25:1-18 இல்), ஆபிரகாமின் இறுதி கட்டம் மற்றும் அவனது வாரிசுகளைப் பற்றிய கதை.

நாம் பார்க்க முடிந்தது போல, ஆபிரகாமின் வாழ்க்கையின் கதை அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளின் அடிப்படை வரிசையைப் பின்பற்றுகிறது. அவருடன் தொடங்கும் கதைகள் ஒப்பீட்டளவில் இளமையாகவும், அவரது தந்தையின் அதிகாரத்தின் கீழும் தொடங்குகின்றன, மேலும் அவை ஆபிரகாம் வயதாகி இறந்து போவதுடன் முடிவடைகின்றன. சில சமயங்களில், ஆபிரகாமின் வாழ்க்கையின் பல்வேறு அத்தியாயங்களில் குறிப்புகள் மற்றும் மறைமுகமான தொடர்புகள் உள்ளன. ஆனால் பழைய ஏற்பாட்டின் பிற பகுதிகளுடன் ஒப்பிடுவதன் மூலம், ஆபிரகாமின் வாழ்க்கைக் கதை ஒப்பீட்டளவில் தனியாக பதினேழு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இந்த அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் ஆபிரகாமின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளைத் தெரிவிப்பதற்கும் மோசேயின் முதல் இஸ்ரவேல் பார்வையாளர்களுக்கு குறிப்பிட்ட பாடங்களைக் கற்பிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன. மோசே அவர்களை எகிப்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி அழைத்துச் சென்றபோது, இன்று நம் வாழ்க்கையை வாழும்போது நமக்கு இருக்கிற நிறைய பாடங்கள் போலவே, இந்த அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் அவர்கள் வாழ்க்கைக்கு பல பாடங்களை வழங்கின.

ஆபிரகாமின் வாழ்க்கையின் அடிப்படை அத்தியாயங்களை அறிமுகப்படுத்திய பின்னர், இந்த அலகுகள் எவ்வாறு இணைந்திருக்கின்றன என்பதை ஆராயும் நிலையில் இப்போது இருக்கிறோம். ஆபிரகாமின் வரலாறு எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றது? அவைகளை ஒருங்கிணைப்பதில் என்ன நியதியுள்ளது? எளிமையாகச் சொன்னால்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குறிப்பிட்ட கருப்பொருள்களைச் சுற்றி ஆபிரகாமினுடைய வாழ்க்கையின் அத்தியாயங்கள் இருக்கின்றன மற்றும் இவைகள் ஐந்து சமச்சீர் அல்லது சமநிலைப்படுத்தும் படிகளை உருவாக்குகின்றன.

## ஒழுங்கமைப்பு

முதலாவதாக, முற்பிதாவினுடைய வாழ்க்கையின் ஆரம்பத்தில் என்ன நடந்தது என்று நாம் எதிர்பார்ப்பது போல, மோசேயின் பதிவு ஆபிரகாமின் பின்னணி மற்றும் தேவனுடனான ஆரம்ப அனுபவங்களுடன் தொடங்குகிறது. இந்தப் பகுதியில் பின்வரும் காரியங்கள் அடங்கியுள்ளன: ஆபிரகாமின் வம்சம், மரிக்கப்போகும் அவருடைய தந்தை மற்றும் கானானுக்கு அவர் குடியேறியது. ஆபிரகாமின் குடும்ப பின்னணியை மையப்படுத்தி தேவனுடன் எவ்வாறு ஒரு விசேஷித்த உறவுக்குள் வருகின்றார் என்றும், மேலும் வாக்குத்தத்த தேசத்திற்கு புலம்பெயரத் தொடங்குவதையும் இந்த அதிகாரம் விவரிக்கின்றது.

12:10 லிருந்து 14:24 வரை ஆபிரகாமுடைய வாழ்க்கையின் இரண்டாவது அத்தியாயங்கள் அவருக்கு பிற மக்களுடன் இருந்த முந்தைய தொடர்புகளில் கவனம் செலுத்துகின்றன. எகிப்திலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதும், லோத்துடனான மோதலும், லோத்தை மீட்டதும் அதில் அடங்கும். இந்த மூன்று அத்தியாயங்களும் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பதால் அவை முதன்மையாக ஆபிரகாமின் சந்திப்புகள் மற்றும் பல குழுக்களின் பிரதிநிதிகளுடனான தொடர்புகளில் கவனம் செலுத்துகின்றன. இந்த அதிகாரங்களில், முற்பிதா முதன்மையாக எகிப்தின் பார்வோன், அவனது மருமகனான லோத்து, படையெடுக்கும் ராஜாக்கள், சோதோம் ராஜா மற்றும் சாலேமின் ராஜாவான மெல்கிசேதேக்கு ஆகியோருடன் காரியங்களில் ஈடுபடுவதைக் காண முடியும்.

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் மூன்றாவது மற்றும் மையப் பகுதி 15:1–17:27 இல் ஆபிரகாமின் தேவனுடனான உடன்படிக்கை உறவை மையமாகக் கொண்டுள்ளது. முற்பிதாவினுடைய வாழ்க்கையின் இந்த பகுதியானது, ஆபிரகாமின் உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள், ஆகாருடன் ஆபிரகாமுக்கு ஏற்பட்ட பிரச்சனை மற்றும் ஆபிரகாமின் உடன்படிக்கைத் தேவைகள் போன்ற மூன்று அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

18:1–21:34 இல் தோன்றும் நான்காவது பிரிவு, ஆபிரகாமுக்கும் பிற மக்களுக்கும் இடையிலிருந்த தொடர்புகளுக்கு மாறுகிறது. இந்த அத்தியாயங்கள் முதன்மையாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளன, ஏனென்றால் அவை ஆபிரகாமின் பிற குழுக்களுடனான தொடர்புகளில் கவனம் செலுத்துகின்றன. இந்த அத்தியாயங்கள் சோதோம் மற்றும் கொமோராவுக்கும் ஆபிரகாமுக்கும் இடையிலான தொடர்பை விவரிக்கின்றன. அபிமெலேக்கிற்காக ஆபிரகாம் செய்த விண்ணப்பத்தையும், ஈசாக்கு மற்றும் இஸ்மவேலுடனான ஆபிரகாமின் உறவையும் மற்றும் அபிமெலேக்குடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாமின் ஒப்பந்தத்தையும் நாம் காண்கிறோம். இந்த நான்கு அத்தியாயங்களும் முற்பிதா லோத்துடனும் அவருடைய குடும்பத்தினருடனும் எவ்வாறு தொடர்பு கொண்டார் என்பதையும், சோதோம் மற்றும் கொமோரா மக்களுடனும், பெலிஸ்தியனான அபிமெலேக்குடனும் அவர் எவ்வாறு தொடர்பு கொண்டார் என்பதையும் விளக்குகின்றன.

நாம் எதிர்பார்ப்பது போல, 22:1–25:18 இல் உள்ள முற்பிதாவினுடைய வாழ்க்கையின் ஐந்தாவது மற்றும் இறுதிப் பகுதி, ஆபிரகாமின் வாழ்க்கையின் முடிவைப் பற்றிய காரியங்களை நமக்குத் தருகிறது, குறிப்பாக அவருடைய சந்ததியினர் மற்றும் அவருடைய இறப்பைக் குறித்து பேசுகிறது. ஆபிரகாம் எவ்வாறு தேவனால் சோதிக்கப்பட்டார் என்பதை இது பதிவிடுகிறது. ஆபிரகாம் கல்லறையை வாங்கியதைப் பற்றி இது பதிவிடுகிறது. ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குக்கு மனைவியை கண்டுப்பிடித்தார் என்பதை இது பதிவிடுகிறது. ஆபிரகாமுடைய மரணத்தைக் கூட இது பதிவிடுகிறது. இந்த அதிகாரங்கள் ஆபிரகாமின் மனைவி சாராள் மற்றும் அவனது குமாரன் ஈசாக்கு (ஆபிரகாமின் உண்மையான வாரிசு) மீது கவனம் செலுத்துகின்றன, இது ஆபிரகாமின் மற்ற மனைவிகள் மற்றும் அவர்களின் குமாரர்கள் மீதான மரியாதையை இவர்களுக்கு அளிக்கிறது.

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் அத்தியாயங்கள் ஒன்றுக்கொன்று ஒப்பீட்டளவில் எதையும் சாராமல் இருப்பதால், மக்கள் ஆபிரகாமைப் பற்றி முதலில் படிக்கிறபோது, அவர்கள் பெரும்பாலும் ஒரு நிகழ்விற்கும் இன்னொரு நிகழ்விற்கும் எந்த தொடர்பையும் காண முடியாமல் இருக்கின்றனர். ஆபிரகாமுடைய கதைகளை வாசிக்கும்போது மோசே திட்டமிட்டே இந்த நிகழ்வுகளை எழுதியிருக்கலாம் என்ற எண்ணம் வருகிறது. ஆனால் இந்த முதல் எண்ணம் இருந்தபோதிலும், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கதைகள் உண்மையில் மையக் கருப்பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் தொகுதிகள் அல்லது அத்தியாயங்களின் குழுக்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஆபிரகாமைப் பற்றி என்ன சொல்லப் போகிறார் என்பதை மோசே உண்மையில் திட்டமிட்டார் என்பதை நம்முடைய எளிய ஐந்து-படி வெளிப்பாடு வெளிப்படுத்துகிறது. பெரிய அளவில் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் பதிவு ஒரு சமச்சீர் நாடகத்தின் வடிவத்தில் உள்ளது. நாடகத்தில் தொடர்புள்ள ஒவ்வொரு பகுதியும் மற்ற பகுதியுடன் இசைந்து செல்கிறது.

11:10–12:9 இல், ஆபிரகாமின் குடும்பப் பின்னணி மற்றும் தேவனுடனான ஆரம்ப அனுபவங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறோம். இந்த ஆரம்ப காரியங்களுடன் மாறுபட்ட சமநிலையில், 22:1–25:18 இல் உள்ள இறுதிப் பகுதி ஆபிரகாமின் இறுதி காலங்களிலும் அவனுடைய சந்ததியினரிலும் கவனம் செலுத்துகிறது.

இதற்கு அப்பால், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் இரண்டாவது பகுதி, பிற கோத்திரத்தார் மற்றும் தேசங்களைச் சேர்ந்தவர்களுடன் ஆபிரகாமின் தொடர்புகளை முதன்மையாக வரையறுக்கும் அத்தியாயங்களைக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொண்டுள்ளது. வட்ட சமச்சீரின் மூலம், இரண்டாம் பாகத்தில் கையாளப்பட்ட ஒத்த கருப்பொருள்களுக்குத் திரும்பி, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் நான்காவது பகுதி, ஆபிரகாம் மற்றவர்களை சந்தித்ததற்கான கூடுதல் உதாரணங்களில் கவனம் செலுத்துகிறது.

இறுதியாக, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் மத்தியில், மூன்று முக்கிய அதிகாரங்கள் குறிப்பாக ஆபிரகாம் தேவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மையமாகக் கொண்டுள்ளன. இந்த அதிகாரங்கள் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் முக்கிய மையத்தை உருவாக்குகின்றன, மேலும் ஆபிரகாமும் அவருடைய சந்ததியினரும் தேவனுடன் வைத்திருந்த உடன்படிக்கை உறவின் அடிப்படை இயக்கவியலை விளக்குகின்றன.

இந்த அதிகாரங்களின் வடிவம் மோசே தனது பதிவை கவனமாக வடிவமைத்ததை வெளிப்படுத்துகிறது. அவர் ஆபிரகாமின் வாழ்க்கையின் சில அம்சங்களுக்கு நேராக கவனத்தை ஈர்க்க, ஆசீர்வாதத்திற்கான ஆபிரகாமின் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவனது உரிமையுள்ள வாரிசு, ஆபிரகாமின் முந்தைய மற்றும் பிந்தைய தொடர்புகள் மற்றும் தேவனுடன் ஆபிரகாமின் உடன்படிக்கை உறவு என்ற இஸ்ரவேலுடைய முதல் முற்பிதாவின் இலக்கிய உருவப்படத்தை உருவாக்கினார். நாம் பார்க்கவிருக்கிற படி, இந்த இலக்கிய கவனம் மோசே இந்த கதைகளை முதலில் எழுதிய இஸ்ரவேலரின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மோசே அவர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி அழைத்துச் சென்றபோது ஆபிரகாமின் வாழ்க்கை இஸ்ரவேலருக்கு ஆபிரகாமின் அடிச்சுவடுகளை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்று கற்பித்தது. ஆதியாகமத்தில் நாம் இந்தப் பகுதிகளை அணுகும் போது, இதன் முக்கியத்துவம் திரும்பத் திரும்ப வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் விரிவான இலக்கிய வடிவமைப்பைக் கண்ட பின்னர், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் பற்றிய நமது பாடத்தின் இரண்டாவது தலைப்பான ஆதியாகமம் 11:10–25:18 இன் முக்கிய கருப்பொருள்களுக்கு நாம் திரும்ப வேண்டும். இந்த அதிகாரங்களின் உள்ளடக்கத்தை விவரிக்க பல வழிகள் இருந்தாலும், நாம் பரிந்துரைத்த உருவரைக் குறிப்பு இந்த அதிகாரங்களின் முக்கிய கருப்பொருள்களுடன் தோராயமாக ஒத்திருப்பதைக் காண்போம்.

# முக்கிய கருப்பொருள்கள்

ஆபிரகாமின் வாழ்க்கையைப் போல நீண்ட மற்றும் சிக்கலான வேதப் பகுதியின் முக்கிய கருப்பொருள்களை விவரிப்பது கடினம் என்று சொல்லத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவையில்லை. இந்த அதிகாரங்களிலுள்ள ஒவ்வொரு மையக் கருத்தையோ அல்லது கருப்பொருளையோ குறிப்பிடுவது இயலாத ஒன்று. ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த பல மையக்கருத்துக்களை தனிமைப்படுத்த முடியும். நாம் பார்ப்பது போல், இந்த அதிகாரங்களில் உள்ள இந்த முக்கிய கருப்பொருள்கள் ஆபிரகாமின் வாழ்க்கையின் கதைகளை ஒன்றிணைக்கின்றன, மேலும் ஆபிரகாமின் வாழ்க்கையிலிருந்து தனது முதல் இஸ்ரவேல் வாசகர்கள் பெற்றுக்கொள்வதற்கு மோசே விரும்பிய முக்கிய யோசனைகளைப் புரிந்துகொள்ள அவை நமக்கு உதவுகின்றன. இதை விட, இந்த முக்கிய கருப்பொருள்களில், வேதத்தின் இந்த பகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்ள தேவன் என்ன விரும்புகிறார் என்பதையும் காணலாம்.

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் முக்கிய கருப்பொருள்களை இரண்டு வழிகளில் பார்ப்போம்: முதலில், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் நான்கு முக்கிய கருப்பொருள்களை அறிமுகப்படுத்தும் ஒரு முக்கிய வேத பகுதியை ஆராய்வோம். இரண்டாவதாக, ஆபிரகாமுடைய வாழ்க்கையை உள்ளடக்கிய அதிகாரங்கள் முழுவதிலும் இந்த கருப்பொருள்கள் வெளிப்படும் வழிகளை ஆராய்வோம். ஆபிரகாமுடைய கதையின் கருப்பொருள்களை அறிமுகப்படுத்தும் முக்கிய வேத பகுதிக்கு முதலில் திரும்புவோம்.

## முக்கிய வேத பகுதி

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கதையின் தொடக்கத்தில், ஆதியாகமம் 12:1-3 இல் ஆபிரகாமுக்கு தேவன் அழைப்பு விடுத்ததை நீங்கள் நினைவில் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆபிரகாம் மெசொப்பொத்தோமியாவின் ஊரில் வாழ்ந்தபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்ல தேவன் ஆபிரகாமை அழைத்தார். இந்த வசனங்கள் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் பெரிய கதையில் காணப்படும் மிக முக்கியமான சில அம்சங்களை அறிமுகப்படுத்துகின்றன என்பதை இப்போது பல ஆண்டுகளாக உரைப்பெயர்ப்பாளர்கள் அங்கீகரித்துள்ளனர். இந்த வசனங்களில் மோசே எழுதியதைக் கவனியுங்கள்:

> கர்த்தர் ஆபிராமை நோக்கி இவ்வாறு கூறினார், "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து; உன் பேரைப் பெருமைப் படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதியாகமம் 12:1-3).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த மூன்று வசனங்களிலும் முக்கியத்துவங்கள் நிரம்பியுள்ளன, அவற்றை பல வழிகளில் சுருக்கமாகக் கூறலாம். ஒரு இலக்கண ரீதியில், அவை 1 வது வசனத்தின் முதல் பகுதியில் ஒரு அறிமுகத்துடன் தொடங்குகின்றன. பின்னர் அவை ஆபிரகாமிடம் தேவன் பேசின வார்த்தைகளுடன் தொடர்கின்றன, அவை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. பகுதி 1, 1 வது வசனத்தின் இரண்டாம் பாதியிலிருந்து கிட்டதட்ட 2 வது வசனம் முழுவதிலும் ஒரு கட்டளையைக் கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து மூன்று தற்சார்ந்த வாய்மொழி வெளிப்பாடுகள் உள்ளன. தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னவற்றின் இரண்டாம் பகுதி 2 வது வசனத்தின் கடைசி பகுதியிலும் 3 வது வசனத்திலும் காணப்படுகிறது. இந்த இரண்டாவது பாதி முதல் பாதியின் அதே இலக்கண முறையைப் பின்பற்றுகிறது. இது ஒரு கட்டளையால் அறிமுகப்படுத்தப்படுகிறது, அதைத் தொடர்ந்து மூன்று தற்சார்ந்த வாய்மொழி வெளிப்பாடுகள் உள்ளன. ஆதியாகமம் 12:1-3 இன் இந்த மூன்று பிரிவுகளைப் பார்ப்பதன் மூலம் இந்த வேத பகுதியின் முக்கியத்துவத்தைப் பற்றிய சில முக்கியமான நுண்ணறிவுகளைப் பெறலாம்.

## முன்னுரை

ஆபிரகாமிடம் தேவன் பேசின வார்த்தைகளை எளிமையாக மோசே அறிமுகம் செய்வதை வசனம் 1 இல் பாருங்கள்:

> கர்த்தர் ஆபிராமிடம் இவ்வாறு சொன்னார் (ஆதியாகமம் 12:1).

இந்த வரிசையில் உள்ள வினைச்சொல் “கர்த்தர் சொன்னார்” என்பதற்குப் பதிலாக “கர்த்தர் *சொல்லி இருந்தார்”* என்று மொழிப்பெயர்க்கப்பட வேண்டும் என்பதை பல நவீன மொழிப்பெயர்ப்புகள் சரியாகக் கவனிக்கின்றன. இந்த மொழிப்பெயர்ப்பு முக்கியமானது, ஏனென்றால் அப்போஸ்தலருடைய நடபடிகள் 7:2-4 இல் ஸ்தேவானின் உரையின் படி, ஆபிரகாம் தனது தந்தை தேராகு ஆரானில் இறப்பதற்கு முன்பு ஊரில் தனது தேவ அழைப்பைப் பெற்றான். ஆனால் ஆதியாகமத்தின் இலக்கிய விளக்கத்தில், தேராகு 11:32 இல் இறந்துவிட்டார் என்பதை முதலில் அறிகிறோம், பின்னர் தேவன் ஆபிரகாமை அழைத்ததை ஆதியாகமம் 12:1 இல் அறிகிறோம். இந்த காரணத்திற்காக, ஆதியாகமம் 12:1 ஒரு நினைவுமீட்பைக் குறிக்கிறது, அதாவது காலத்தின் பின்னடைவைக் குறிக்கிறது, மற்றும் ”கர்த்தர் சொல்லி இருந்தார்” என்று இது மொழிப்பெயர்க்கப்பட வேண்டும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி நகரத் தொடங்குவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, ஆபிரகாம் தேவனுக்கு பதிலளிக்க எதையும் செய்யத் தொடங்குவதற்கு முந்தைய தருணத்தை இந்த வசனம் நினைவுபடுத்துகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பகுதி ஒன்று

இந்த அறிமுகத்தைத் தொடர்ந்து, ஆபிரகாமிடம் தேவன் பேசிய வார்த்தைகளின் முதல் பாதிக்கு வருகிறோம். இந்த முதல் பாதி ஒரு கட்டளையைக் குறிக்கும் கட்டளை வினைச்சொல்லுடன் தொடங்குகிறது. ஆதியாகமம் 12:1 இல் இந்த வார்த்தைகளைப் படிக்கிறோம்:

> நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (ஆதியாகமம் 12:1).

“விட்டுப் புறப்படு” என்ற ஒரு கட்டளையுடன் இந்தப் பகுதி ஆங்கில வேதாகமத்தில் துவங்குவதை நாம் காணலாம், (அல்லது NIV வேதாகமத்தில் இது ”விட்டுப்…போ” என இருக்கிறது). தேவன் ஆபிரகாமோடு ஏதோ ஒன்றைச் செய்யச் சொல்கிறார்: கானான் தேசத்திற்குப் போகும்படியாகச் சொல்கிறார். தேவன் முற்பிதாவுக்குக் கொடுத்த முதலாவதும் முதன்மையானதுமான கட்டளை இதுதான்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குப் போகும்படியாக கட்டளையிட்ட பின்பு, வசனம் 2 இன் முதல் பகுதியில் மூன்று தனித்து செயல்படக்கூடிய வாய்மொழி வெளிப்பாடுகளால் ஆபிரகாமுக்கு தேவன் சொன்ன வார்த்தைகளின் முதல் பகுதியானது மூன்று பிரிவுகளாகப் பிரிகிறது. ஆதியாகமம் 12:2 யை மீண்டும் காண்க:

> நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் (ஆதியாகமம் 12:2).

இந்த வார்த்தைகள் தேவன் ஆபிரகாமை அழைத்ததன் காரணமாக அவர் ஆபிரகாமுக்கு வழங்கிய ஆசிர்வாதங்கள் மீது கவனம் செலுத்துகின்றன. முதலாவதாக, ஆபிரகாமை ஒரு பெரிய தேசமாக ஆக்குவேன் என்று தேவன் சொன்னார். இரண்டாவதாக, அவர் ஆபிரகாமை அபிவிருத்தியாக ஆசிர்வதிப்பதாக சொன்னார். மற்றும் மூன்றாவதாக, அவர் ஆபிரகாம் மற்றும் அவருடைய சந்ததியினருக்கு பேர் உண்டாகவும், பெருமையடையவும் செய்வதாகச் சொன்னார்.

## பகுதி இரண்டு

இப்பொழுது நாம் தேவன் ஆபிரகாமுடன் சொன்ன வார்த்தைகளின் இரண்டாவது பகுதிக்கு வந்துள்ளோம். நவீன மொழிப்பெயர்ப்புகள் இதனை நாம் கண்டுகொள்வதற்கு உதவியாக இல்லாவிட்டாலும், இந்த இரண்டாவது பகுதியானது, தேவன் ஆபிரகாமுக்குச் சொன்ன வார்த்தைகளின் முதல் பகுதிக்கு இணையான இலக்கண அமைப்புக்கு ஒத்ததாகக் காணப்படுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இது ஒரு கட்டளையுடன் துவங்குவதும் அதைத் தொடர்ந்து மூன்று தனித்துச் செயல்படும் வினைச்சொற்களின் வெளிப்பாடுகளை உடையதுமாகக் காணப்படுகிறது. ஆதியாகமம் 12:2-3 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதியாகமம் 12:2-3).

"நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" என்பதன் எபிரெய வினைச்சொல், இங்கு கட்டளை வாக்கியமாக மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது, மேலும் அநேகமாக இது "விட்டுப்புறப்படு" என்று வசனம் 1 இல் காணப்படும் கட்டளைக்கு இணையாக இருக்கும்படியாக இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த வார்த்தையானது கட்டளையாக இங்கு செயல்படவில்லை. இது பல வழிகளில் மொழிப்பெயர்க்கப்படலாம்: "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்", அல்லது "நீ ஒருவேளை ஆசீர்வாதமாய் இருக்கலாம்", அல்லது, " நீ நிச்சயமாக ஆசீர்வாதமாய் இருப்பாய்" என்றுகூட மொழிப்பெயர்க்கப்படலாம். எல்லா நிகழ்வுகளிலும், இந்த கட்டளை அடையாளங்கள் சிந்தனைக்கு முக்கியமான மாற்றமாக இருக்கலாம். இது ஆபிரகாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்து (2 வது வசனத்தின் முதல் பகுதியில் நாம் பார்த்ததுபோல), ஆபிரகாம் மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்கு ஒரு வழியாக உருவாகுவதை நோக்கி நமது கவனத்தைத் திருப்புகிறது.

இரண்டாவது கட்டளை அமைப்பையும் மூன்று தனித்துச் செயல்படக்கூடிய வினைச்சொற்களின் வெளிப்பாடுகள் பின் தொடர்கின்றன. இந்த மூன்று வினைச்சொற்களும் ஆபிரகாம் எவ்வாறு மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பார் என்ற முறையை சுட்டிக்காட்டுகின்றன. முதலாவது, தேவன் சொன்னார், "உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்…" அதாவது, ஆபிரகாமோடு நேர்மறையாக நடந்துகொள்பவர்களுக்கு நன்மையானதை வழங்குவார். ஜனங்கள் ஆபிரகாமை நன்றாக நடத்தினபொழுதெல்லாம், தேவன் அவர்களை நன்றாக நடத்துவார். இரண்டாவது, "உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்," அதாவது, தேவன் ஆபிரகாமை வெறுப்பவர்களைச் சபிப்பார். ஆபிரகாமுடன் தன்னை எதிரிகளாக மாற்றிக்கொண்டவர்களுக்கு கடுமையாகப் பதிலளித்து ஆபிரகாமை தீங்கிலிருந்து பாதுகாப்பதாகத் தேவன் வாக்குத்தத்தம் செய்தார். ஆனால் மூன்றாவதாக, "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் கூறினார். முதல் பார்வையில், இந்த மூன்றாவதாகச் சொல்லப்பட்டதை நோக்கி கவனம் செலுத்தும்போது, ஆபிரகாமுடைய பகைவர்களைச் சபிப்பதாகக் கூறப்படும் கருத்துக்கு முரணானதாகத் தோன்றலாம், ஆனால் ஆபிரகாமுடைய சிநேகிதர்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆசீர்வதித்தல் மற்றும் பகைவர்களைச் சபித்தல் என்ற இரட்டிப்பான செயல்முறையை தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்தார், தேவன் அவருடைய ஆசீர்வாதங்களை உச்சமாக பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் நீட்டித்து வழங்குவார். அவ்விதமாக ஆதியாகமம் 12 ஆம் அதிகாரத்தின் துவக்கத்தின் இலக்கணமானது மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கிறது என்பதை நாம் பார்த்தோம்: முன்னுரை, தேவன் ஆபிரகாமுக்குக் கொடுக்கும் ஆசீர்வாதங்களின் மீது கவனம் செலுத்துதல் மற்றும் ஆபிரகாம் மூலமாக தேவன் இந்த முழு உலகிற்குக் கொடுக்கும் ஆசீர்வதங்களின் மீது கவனம் செலுத்துதல் ஆகிய மூன்று முக்கிய பகுதிகள்.

ஆதியாகமம் 12 ஆம் அதிகாரத்தின் இந்த வசனங்களின் அமைப்பைப் புரிந்துகொள்வது மிக முக்கியமானது ஏனென்றால் பல விஷயங்களில் ஆதியாகமத்தில் சொல்லப்பட்டுள்ள ஆபிரகாமின் இந்தக் கதையானது தேவன் ஆபிரகாமிடம் செய்துகொண்ட இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் எவ்வாறு ஆபிரகாமுடைய வாழ்க்கையில் நிறைவேறின என்பதை விளக்குகிறது. மோசே முற்பிதாக்களைக் குறித்து எழுதும்போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு தேவன் ஆபிரகாமை அழைத்து ஆபிரகாமுடன் பேசிய வார்த்தைகள் மீது கவனத்தை இழுத்துக் கொள்ளும் வழியில் மோசே அவருடைய கதைகளை வடிவமைக்கிறார்.

இந்த இலக்கண அமைப்பை நினைவில் வைத்துக்கொண்டு, ஆதியாகமம் 12:1-3 லிருந்து எவ்வாறு ஆபிரகாமுடைய வாழ்க்கையின் பிரதான கருத்துகள் விரிவடையப்போகிறது என்பதைப் பார்க்க நாம் தயாராக உள்ளோம்.

# திறப்பு

இந்த வசனங்களில் நான்கு மிக முக்கியமான கருத்துகள் காணப்படுவதை நாம் கவனிக்கலாம். ஆபிரகாமுக்கு தெய்வீக கிருபை என்பதிலிருந்து நாம் துவங்கலாம். அதன் பிறகு தேவனிடத்தில் ஆபிரகாமுடைய தேவப்பற்றின் அவசியம் பற்றியும், முடிவாக ஆபிரகாம் வழியாக தேவனுடைய ஆசீர்வாதங்கள் குறித்தும் நாம் தொடருவோம்.

## தெய்வீக கிருபை

ஆபிராகமுடனான தேவனுடைய உறவானது தேவனுடைய கிருபையின் அடிப்படையில் உள்ளது, ஆபிரகாமுடைய வாழ்வில் பல முறை ஏற்படும் இந்நிகழ்வே முதல் மையக்கருத்து ஆகும். ஆதியாகமம் 12:1 இன் அறிமுக வார்த்தைகளில் தேவ கிருபையானது நுட்பமான வழியில் தோன்றுகிறது. நாம் பார்த்ததுபோல, இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கலாம்:

> கர்த்தர் ஆபிராமிடம் இவ்வாறு சொன்னார் (ஆதியாகமம் 12:1).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுடனான ஆபிரகாமினுடைய உறவு ஏற்படுவதற்கு காரணம் என்னவென்றால் வெகு காலத்திற்கு முன்பாகவே, அதாவது ஆபிரகாம் தேவனுக்கு எந்த சேவையும் செய்வதற்கும் முன்பாகவே, தேவன் ஆபிரகாமுடைய வாழ்க்கையில் வந்துவிட்டார் என்று இந்த சாதாரணமான வார்த்தைகள் மோசேயினுடைய மூல பார்வையாளர்களுக்கு நினைவூட்டியது.

ஆபிரகாமுடைய அழைப்பு அவருடைய முதிர் வயது வாழ்க்கையின் மிக ஆரம்ப காலத்திலேயே வந்துவிட்டது. அவர் கானானுக்குப் புறப்படவில்லை; அவர் பகைவர்களை வெற்றிகொள்ளவில்லை; உடன்படிக்கையின் விசுவாசத்திற்கு அவர் ஒப்புக்கொடுக்கவில்லை; சோதோம் மற்றும் கொமோராவின் நீதிமான்களுக்காக ஜெபிக்கவில்லை; அவர் விசுவாசத்தின் பரீட்சை எதையும் கடக்கவில்லை. அதற்கு முரணாக, தேவன் ஆபிரகாமை அவருடைய விசேஷித்த வேலைக்காரனாக சாதாரணமாக அழைத்திருந்தார் ஏனென்றால் ஆபிரகாமிடத்தில் கிருபையுள்ளவராக இருப்பது தேவனுக்குப் பிரியமாயிருந்தது.

இப்போது நிச்சயமாக, ஆபிரகாம் தேவனுடன் சஞ்சரித்து வந்த ஆரம்ப நிலையில் மட்டும் தேவனுடைய கிருபை காட்டப்படவில்லை. தேவனுடைய கிருபை என்னும் மையக்கருத்து ஆபிரகாமுடைய கதை முழுவதுமாக தோன்றுகிறது ஏனென்றால் முற்பிதாக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் தேவன் அவரது இரக்கத்தைக் காண்பித்தார். ஏனென்றால் ஆபிரகாம் ஒரு பாவியாயிருந்தார், ஆபிரகாமுக்கு தேவனுடைய இரக்கம் எந்நேரமும் தேவைப்பட்டது. உதாரணமாக, நன்றாக தெரியப்படும் வசனமாகிய ஆதியாகமம் 15:6 இல் ஆபிரகாமுடைய இரட்சிப்பின் நீதியானது இரக்கத்தின் ஒரு பரிசே என்று நாம் கற்றுக்கொள்கிறோம். அங்கே இந்த வார்த்தைகளை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் (ஆதியாகமம் 15:6).

ரோமர் 4:3 மற்றும் கலாத்தியர் 3:6 இல் அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டிய உண்மையைப் போல தேவன் ஆபிரகாமை நீதியுள்ளவனாக எண்ணி மேன்மைப்படுத்தினார் என்பது இரக்கத்தின் ஒரு செயலே, நற்கிரியைகளுக்கான வெகுமதி அல்ல என்பதை சுட்டிக்காட்டுகிறது. மேலும் தெய்வீக கிருபை மற்றும் இரக்கத்தினால் இந்த ஆசீர்வாதம் மற்றும் பிற ஆசீர்வாதங்கள் அனைத்தையும் ஆபிரகாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய வாழ்வில் தேவனுடைய கிருபையின் முக்கியத்துவத்தை நன்றாக அறிந்திருக்கிறோம். அவருடைய கிருபையினாலேயே தேவன் அவருடனான நம்முடைய உறவை தொடங்குகிறார் மற்றும் அவருடைய கிருபையினால் அவருடனான நமது உறவை நீடிக்கப்பண்ணுகிறார். தேவனுடைய இரக்கம் இல்லாதிருந்தால் நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எங்கிருந்திருப்போம்? இதே நிலை தான் ஆபிரகாமிற்கும் என்பதே உண்மை. அதற்கு அதிகமாக, மோசே ஆபிரகாமைப் பற்றி எழுதிய இஸ்ரவேலர்களுடைய வாழ்க்கைக்கும் தேவனுடைய கிருபை மிகவும் அவசியமான ஒன்று. தேவனுடைய இரக்கம் அவர்களுடைய அனுதின வாழ்க்கைக்கும் அவசியமாய் இருந்தது. இதன் காரணமாக, மோசே ஆபிரகாமினுடைய வாழ்க்கைக் கதையைத் தொகுக்கும்போது, அவர்களுடைய கவனத்தை மீண்டும் மீண்டுமாக தேவனுடைய கிருபையின் மீது திருப்புகிறார்.

## ஆபிரகாமுடைய தேவப்பற்று

தேவ கிருபை என்னும் மையக் கருத்துடன் கூடுதலாக, ஆதியாகமம் 12:1-3 ஆபிரகாமினுடைய தேவப்பற்றையும் வலியுறுத்துவதை நாம் கவனிக்க வேண்டும். தேவன் வீணாக அவருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள ஆபிரகாமை தெரிந்துகொள்ளவில்லை; ஆபிரகாம் உண்மையான கீழ்ப்படிதலுடன் பதிலளிப்பார் என்பதற்காக தேவன் முற்பிதாவுக்கு இரக்கம் காண்பித்தார். நாம் பார்த்தபடியே, ஆதியாகமம் 12:1 இல் காணப்படும் முதல் கட்டளை தேவனிடத்தில் ஒரு குறிப்பட்ட வழியில் உண்மையாய் இருப்பதற்கு ஆபிரகாமினுடைய பொறுப்பு என்ன என்பதை வலியுறுத்துகிறது. தேவன் அங்கே ஆபிரகாமுக்கு கட்டளையிட்டார்:

> நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (ஆதியாகமம் 12:1).

இந்த தெய்வீக அழைப்பானது ஆபிரகாமிடமிருந்து மகத்தான தேவப்பற்றை அவசியப்படுத்துகிறது என்பதைக் காண அதிகமான சிந்தனையை எடுத்துக்கொள்ளவில்லை. ஆபிரகாம் தனது சொந்த தேசத்தையும் தனது தகப்பனுடைய சம்பத்துகளையும் பின்னாக விட்டுவிட்டு இன்னும் காண்பிக்கப்படாத ஒரு இடத்திற்குப் போக வேண்டும். ஆம், தேவன் ஆபிரகாமிற்கு இரக்கம் காட்டினார், ஆனால் ஆபிரகாம் ஆழமான, தேவப்பற்றுள்ள சேவையை தேவனுக்கு செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டார்.

துரதிர்ஷ்டவசமாக, அநேக கிறிஸ்தவர்கள் தேவனிடத்தில் விசுவாசம் மற்றும் நம்பிக்கை உடையவர்கள் என்பதற்கு ஆபிரகாமை சாதரணமான உதாரணமாக சிந்திப்பதற்கு முனைகிறார்கள். இது ஆபிரகாமினுடைய வாழ்க்கையின் முக்கியமான மையக்கருத்து ஆகும் மற்றும் இது புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளில் முன்னிலைப்படுத்திக் காட்டப்பட்டது. ஆனால் தேவன் ஆபிரகாமை கீழ்ப்படிதலுள்ளவராகவும், தேவப்பற்றுள்ள தனது சேவையை தேவனுக்கு வழங்கும்படியாகவும் கட்டளையிட்டார் என்ற இந்த உண்மையை ஒருபோதும் மேலோட்டமாகப் பார்க்கக்கூடாது. அநேக முறை முற்பிதாவிடமிருந்து தேவன் தேவப்பற்றை எதிர்பார்த்தார். ஒவ்வொரு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சூழ்நிலையிலும் ஆபிரகாம் தேவனுக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டியிருந்தது.

அநேகமாக ஆபிரகாம் தன்னுடைய தேவப்பற்றை தேவனிடத்தில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்ட வேளையின் வியத்தகு உதாரணமாக ஆதியாகமம் 22 உள்ளது, ஆபிரகாம் அவரது குமாரனை விட தேவனை அதிகமாக நேசித்தார் என்பதை நிரூபிக்கும் விதமாக, முற்பிதாவாகிய ஆபிரகாம் அவரது குமாரனாகிய ஈசாக்கை பலியிடும்படி அங்கே தேவன் கட்டளையிட்டார். தேவனிடமிருந்து இப்படிப்பட்டதொரு உயரிய எதிர்பார்ப்பை சிந்தனை செய்து பார்ப்பது கடினமானது.

ஆபிரகாம் தன்னுடைய உண்மைத்தன்மையை இப்படியாகவும் மற்றும் பிற அநேக வழிகளிலும் காட்டும்படியாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ஆதியாகமம் 12:1 ஆபிரகாம் கொண்டிருந்த மிக முக்கியமான பொறுப்புகளில் ஒன்று இது என்பதை தெளிவாக்குகிறது. தேவன் இவ்வாறு கூறினார்:

> நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (ஆதியாகமம் 12:1).

இந்த பகுதி விளக்கமளிப்பது போல, ஆபிரகாம் தேவன் காண்பிக்கும் தேசத்திற்குப் போக வேண்டியிருந்தது. ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே குடியிருக்க வேண்டும், இந்த மையக்கருத்தானது முற்பிதாவைக் குறித்ததான கதைகளில் அநேக முறை தோன்றுகிறது. ஆபிரகாமும் அவருடைய உண்மையான சந்ததியினரும் முற்பிதாவிற்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு செல்வது என்பது தேவனுடைய மிகப்பெரிய திட்டத்தில் மிக முக்கியமானது. ஆபிரகாம் இஸ்ரவேலர்களுக்காக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி தானாகவே சென்றார் என்று மோசே ஆபிரகாமைக் குறித்து எழுதின கதைகளை நாம் நினைவுகூரும்போது, ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, நாம் புரிந்துகொண்டது என்னவென்றால் இரட்சிப்பு என்பது தேவனுடைய கிருபையின் ஈவு என்ற போதிலும், இயன்ற அளவு நாம் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக நமது நன்றியுணர்வை வெளிப்படுத்தவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதே. மோசேயும் இந்தக் கொள்கையைப் புரிந்திருந்தார். தேவனுடைய கிருபை தான் ஆபிரகாமை தேவப்பற்றுள்ளவராக வழிநடத்தியது என்பதை மோசே அறிந்திருந்தார். இதன் காரணமாக, ஆபிரகாமினுடைய வாழ்க்கையைப் பற்றி நாம் படிக்கும்போது தேவப்பற்றின் அவசியம் அநேக முறை தோன்றுகிறது என்பதை நாம் பார்க்கப்போகிறோம். மோசே அவருடைய மூல பார்வையாளர்கள் பற்றி சிறிது அறிந்திருந்தார். அவர்கள் தேவனுக்கு முன்பாக உண்மையாக வாழ்வதின் முக்கியத்துவத்தை மறந்துவிடுவதற்கு வாய்ப்பிருந்தது. அவர்களுக்கு அதிகமான தனது இரக்கத்தைக் காண்பித்து எகிப்திலிருந்து அவர்களை விடுவித்தும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வனாந்தரத்தில் அவர்களை பாதுகாத்தும் வந்தபோதிலும், அவர்கள் தேவனுடைய கட்டளைகளிலிருந்து பின்திரும்பினார்கள். இதன் காரணமாக, ஆபிரகாமைக் குறித்த கதைகளில் ஆபிரகாமின் தேவப்பற்றே ஒரு முக்கிய மையக்கருத்தாகும். இந்த மையக்கருத்து அடிக்கடி தோன்றுகிறது ஏனென்றால் மோசேயின் மூல பார்வையாளர்களும், இன்று நாமும், தேவனை உண்மையான கீழ்ப்படிதலுடன் சேவிக்க வேண்டும் என்று உந்துவதற்காகவே.

## ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள்

தேவன் ஆபிரகாமிற்கு அதிகமான கிருபையைக் காண்பித்தார், மற்றும் ஆபிரகாமிடமிருந்து உண்மையான பக்தியை எதிர்பார்த்தார் என்று நாம் இதுவரை பார்த்தோம். மூன்றாவது மையக் கருத்தாக ஆதியாகமம் 12:1-3 இல் ஆபிரகாமிற்கு வழங்கப்பட்ட ஆசீர்வாதங்களை நாம் கவனிக்க வேண்டும். ஆதியாகமம் 12:2 இல் முற்பிதாவிடம் தேவன் கூறியதை நீங்கள் நினைவு கூறலாம்:

> நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் (ஆதியாகமம் 12:2).

தேவன் முற்பிதாவிற்கு மூன்று ஆசீர்வாதங்களை வழங்கினார். முதலாவதாக, தேவன் ஆபிரகாமை பெரிய ஜாதியாக்குவதாகக் கூறினார். ஆபிரகாமுடைய சந்ததி எண்ணி முடியாததாய்ப் பலுகிப் பெருகுவார்கள். மேலும் அவனுடைய சந்ததி பெரிய ஜாதியாகவும், ராஜ்யமாகவும் உருவாகும். இது சொல்லப்பட்ட சமயத்தில், ஆபிரகாமும் அவனோடிருந்தவர்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்தார்கள். மேலும் ஆபிரகாமிற்கு பிள்ளைகளில்லாதிருந்தது. இருப்பினும், அவனுடைய சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் பார்க்கிலும் அதிகமாயிருப்பார்கள் என்று தேவன் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார்.

இரண்டாவதாக, தேவன் ஆபிரகாமை ஆசீர்வதிப்பதாக சொல்லியிருந்தார். எல்லாவிதத்திலும் ஆபிரகாமும் அவனுடைய சந்ததியும் செழிப்பான பிரமாண்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்று இது அர்த்தப்படுத்துகிறது. ஆபிரகாமும் அவனுடைய சந்ததியாரும் சம்பூரணமாக செல்வமுடையவர்களாய் வாழ்வார்கள். அவர்கள் பூமியிலே அலைந்து திரிவதில்லை, வெறும் புலம்பெயர்பவர்களாக இருப்பதில்லை. ஆபிரகாமும் அவனுடைய பிள்ளைகளும் உண்மையுள்ளவர்கள் என்று விளங்கினபடியால், அவர்கள் செழிப்பானதை அனுபவிப்பார்கள்.

மூன்றாவதாக, ஆபிரகாமிற்குப் பேர் விளங்கப்பண்ணுவதற்குரிய அநுக்கிரகத்தை உள்ளடக்கியதாக தேவன் வழங்கிய ஆசீர்வாதம் உள்ளது. வேறுவிதமாக சொல்வதென்றால், ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குப் போவதும் தேவனை உண்மையாய் சேவிக்கவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செய்வாரென்றால், அவரது மிகப்பெரிய எண்ணிக்கையிலான அவருடைய சந்ததியும் அவர்களுடைய செல்வச்செழிப்பும், அவருக்கு பேர் உண்டாகச் செய்யும், அவைகளால், பூமியெங்கும் அவருடைய பேர் கனப்படுத்தப்படும். மிகப்பெரிய மகிமை முற்பிதாவிற்கும் அவருடைய உண்மையான சந்ததியினருக்கும் உண்டாகும்.

உண்மையில், இவ்விதமான ஆசீர்வாதங்கள் ஆபிரகாம் மீது ஊற்றப்பட்டது என்பதை ஆபிரகாமின் வாழ்க்கைக் கதைகள் வழியாக மோசே மீண்டும் மீண்டுமாக சுட்டிக் காட்டுகிறார். ஆபிரகாமிற்கு குமாரர்கள் இருந்தார்கள்; ஆபிரகாம் ஒவ்வொரு அனுபவங்கள் வாயிலாக செல்வங்களை சம்பாதித்தார். ஆபிரகாம் அந்த தேசத்திலே எல்லோராலும் நன்கு அறியப்பட்ட ஒரு நபர் ஆனார். இந்த கதைகளைக் கேட்ட இஸ்ரவேலர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் வருங்கால ஆசீர்வாதங்களைக் குறித்ததான ஒரு நம்பிக்கையை ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் கொண்டு வந்தன. முற்பிதாவிற்குக் கொடுக்கப்பட்டதான பரிசுகளாகிய சந்ததி, செழிப்பு மற்றும் பேர் யாவும், தேவன் ஆபிரகாமின் உண்மையான சந்ததியாருக்கு இதைவிட சிறந்த பரிசுகளைத் தருவார் என்பதற்கானதொரு நிழலாட்டம் ஆகும்.

கிறிஸ்தவர்களாக, நாமும் பெயர்சொல்ல முடியாத அளவில் மிக அதிகமான ஆசீர்வாதங்களை தேவனிடத்திலிருந்து பெற்றிருக்கிறோம். நிச்சயமாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி மோசேயைப் பின்பற்றிச் சென்ற இஸ்ரவேலர்களும் எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்; அவர்கள் எண்ணிக்கைக்கு அதிகமாய்ப் பெருகினார்கள்; வருங்காலத்தில் சுதந்தரிக்கப்போகிற சிறந்த ஆசீர்வாதமாகிய தேசமான, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கிய அவர்கள் பிரயாணங்கள் முழுவதிலும் அவர்கள் ஆதரிக்கப்பட்டார்கள் மற்றும் பாதுகாக்கப்பட்டார்கள். ஆனால் இஸ்ரவேலர்கள் நம்மைப் போல, தேவன் அவர்களுக்குச் செய்த எல்லாவற்றையும் மறப்பதற்கு பழகிப்போனார்கள். ஆகவே, தேவன் தங்களுடைய வாழ்க்கையில் கொடுத்த ஆசீர்வாதங்களை நினைத்து நன்றி நிறைந்த இருதயம் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று நினைவூட்டும்படியாக தேவன் ஆபிரகாமிற்குக் கொடுத்த ஆசீர்வாதங்களைக் குறித்து மோசே இஸ்ரவேலர்களாகிய அவருடைய பார்வையாளர்களுக்கு எழுதுகிறார்.

## ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதங்கள்

தேவனுடைய இரக்கத்தோடு கூட, ஆபிரகாமின் விசுவாசம் மற்றும் ஆபிரகாமுக்கு தேவன் அளித்த ஆசீர்வாதங்களுக்கு மேலதிகமாக, ஆபிரகாம் *மூலமாக* மற்ற மக்களுக்கும் ஆசீர்வாதம் வரும் என்பதையும் ஆதியாகமம் 12:1-3 கூறுகிறது. தேவன் ஆதியாகமம் 12:2-3 இல் என்ன சொன்னார் என்பதை நினைவுகூறவும்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதியாகமம் 12:2-3).

இந்த வார்த்தைகள் ஆபிரகாம் ஆசீர்வாதங்கள் பெறுவதை மட்டுமல்லாமல், பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் அவன் மூலமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதையும் விளக்கின. ஆபிரகாமுடைய வாழ்க்கையையும் அவனுடைய சந்ததியினரின் வாழ்க்கையையும் வளப்படுத்த தேவன் அவனை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைக்கவில்லை. பூமியின் அனைத்து குடும்பங்களுக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களின் ஒரு வழியாக இருக்கும்படி தேவன் ஆபிரகாமை அழைத்தார். ஆபிரகாமுடைய உலகளாவிய ஆசீர்வாதம் இரண்டு வழிகளில் வரும் என்பதை இந்த வேத பகுதி கற்பிக்கிறது என்பதை இப்போது நினைவில் கொள்வது அவசியம். ஆதியாகமம் 12:3 இல் தேவன் சொன்னார்:

> உன்னை ஆசீர்வதிப்பவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன் (ஆதியாகமம் 12:3).

இந்த வேத பகுதியின் படி, ஆபிரகாம் மனிதர்களிடையே இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக செயல்படுவார். ஆபிரகாம் தேவனுக்கு பிரியமானவனாக காணப்பட்டபடியால், மற்ற தேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆபிரகாமை ஆசீர்வதித்தபோது, அதாவது, அவர்கள் அவரை கனம் பண்ணி, அவன் சேவை செய்த தேவனை கனம் செய்த போது, தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார். ஆனால் மற்ற தேச மக்கள் ஆபிரகாமை சபிக்கும்போது அல்லது தாக்கும்போது, இதனால் ஆபிரகாமின் தேவனை இழிவுபடுத்தும்போது, தேவன் அவர்களை தண்டிப்பார். மற்ற மக்களின் தலைவிதி அவர்கள் ஆபிரகாமை எவ்வாறு நடத்தினார்கள் என்பதைப் பொறுத்து இருந்தது.

ஆபிரகாம் தனது வாழ்நாளில், பெலிஸ்தர்கள், கானானியர்கள், எகிப்தியர்கள் மற்றும் மோவாபியர்களுக்கும் அம்மோனியர்களுக்கும் தந்தையாக இருந்த அவரது சகோதரனின் மகனான லோத்து போன்ற பிற நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பலருடன் தொடர்பு கொண்டார். இந்த தொடர்புகள் குறிப்பிடத்தக்கவை, ஏனென்றால் ஆபிரகாமுடன் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதைப் பொறுத்து மற்ற மக்களை ஆசீர்வதிப்பதற்கும் சபிப்பதற்கும் தேவன் தனது வார்த்தையை நடப்பித்த குறிப்பிட்ட வழிகளை அவைகள் காட்டின. ஆபிரகாம் தனது வாழ்நாளிலேயே உலகிற்கு ஒரு ஆசீர்வாதமாக மாறத் தொடங்கினார் என்பதையும் அவைகள் சுட்டிக்காட்டின.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த முக்கியமான போதனையை தேவனுடைய ஜனங்கள் பெரும்பாலும் எளிதாக மறந்து விடுவார்கள். மோசேயின் நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேலர்கள் இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களைப் போன்றே இருந்தனர். தேவனிடமிருந்து இரட்சிப்பின் ஆசீர்வாதத்தையும், அவரிடமிருந்து வரும் வாழ்க்கையையும் நாம் அனுபவிக்கிறோம், ஆனால் இந்த ஆசீர்வாதங்கள் நம் ஒவ்வொருவருக்கும் ஏன் வழங்கப்பட்டுள்ளன என்பதை நாம் மறந்து விடுகிறோம். மோசேயின் தலைமையின் கீழ் தேவன் இஸ்ரவேலுக்கு அளித்த ஒவ்வொரு ஆசீர்வாதமும், இன்று அவர் தனது சபைக்கு அளிக்கும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் ஒரு பெரிய நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. தேவனுடைய ஆசீர்வாதங்களை உலகம் முழுவதும் பரப்புவதற்காக நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். உலக நாடுகள் தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்கும் நோக்கத்தில் ஆபிரகாம் அவைகளை வழிநடத்துவதற்காக தேவன் ஆபிரகாமை தன்னிடம் அழைத்தார். உலக நாடுகளை தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு நேராக அழைத்துச் செல்லும் பொருட்டு மோசேயின் நாளில் தேவன் இஸ்ரவேலை தன்னிடம் அழைத்தார். உலக தேசங்களை தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு நேராக அழைத்துச்செல்லும் பொருட்டு தேவன் இன்று சபையை தன்னிடம் அழைத்திருக்கிறார். ஆபிரகாமின் கதைகளை முதலில் பெற்ற இஸ்ரவேலர்களுக்கு இந்த கருப்பொருள் மிகவும் முக்கியமானது. நம் நாளில் நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் நமக்கும் இது முக்கியமாகும்.

# முடிவுரை

இந்தப் பாடத்தில் நாம் ஆபிரகாமின் வாழ்க்கை வரலாற்றை முதல் கண்ணோட்டமாக பார்த்தோம். ஆதியாகமத்தில் இந்தப் பகுதியின் அமைப்பு அல்லது வடிவமைப்பைப் பற்றி நாம் கவனித்தோம். இந்த இலக்கிய கட்டமைப்பின் சூழலில் ஆபிரகாமின் வாழ்க்கையில் மோசே முன்வைத்த முக்கிய கருப்பொருள்கள் அல்லது உள்ளடக்கத்தையும் நாம் ஆராய்ந்தோம்.

இந்த பாடங்களை நாம் தொடர்ந்து கற்றுக்கொள்ளும்போது, இந்த பாடத்தின் தலைப்புகளுக்கு மீண்டும் மீண்டும் வருவோம். ஆபிரகாமின் வாழ்க்கை கதையில் ஐந்து சமச்சீர் படிகள் உள்ளதாக பார்த்தோம். அதேபோல் ஆபிரகாமின் வாழ்வில் நான்கு முக்கிய கருப்பொருட்கள் இருப்பதாகவும் பார்த்தோம்: ஆபிரகாமுக்கு தேவன் காட்டிய தயவு, ஆபிரகாமுடைய உண்மைத்துவம், ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள் மற்றும் ஆபிரகாம் மூலமாக தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள். இந்த கருப்பொருள்கள் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கதை இஸ்ரவேலுக்காக முதன்முதலில் எழுதப்பட்டபோது நீண்ட காலத்திற்கு முன்பு எதைக் குறித்தது என்பதைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பற்றிய நுண்ணறிவுகளைத் தருவது மட்டுமல்லாமல், வேதத்தின் இந்த பகுதியை இன்று நம் வாழ்விலும் பயன்படுத்துவதை அவை சாத்தியமாக்குகின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.